1982 பிப்ரவரி 16]

ஆ. மருத்தியல் பட்ட மேற்படிப்பிற்கு (எம்.டி.) பட்டயப் படிப் புடையோரை மட்டுமே அனுமதிக்கும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு.

டாக்டர் ஹே. சௌரி ராஜன்: துணைத் தலைவர் அவர்களே, ''மருந்தியல் பட்ட மேற்படிப்பிற்கு (எம். டி) பட்டயப் படிப்புடையோரை மட்டுமே (எம்.பி.பி.எஸ். படிப்பிற்குப் பின்) அனுமதிக்கவேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் விளைவாக நமது மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1981–82 ஆம் ஆண்டிற்கு முன்னர், எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற அனைவரும் பட்டப்படிப்பு தகுதி மட்டும் உடையவரானாலும் அல்லது பட்ட மேற்பட்டயப்படிப்புத் தகுதி பெற்றவரானாலும் பாகுபாடு இன்றி பட்ட மேற்படிப்புக்கு மனு செய்ய தகுதியானவராவர். இதன் விளைவாக ஏராளமான மகப்பேறு மருத்துவ பட்டமேற்படிப்பு (எம். டி. ஓ & ஜி) போன்ற மகப்பேறு மருத்துவ பட்டயப் படிப்பு (டி.ஜி.ஓ.) படித்தவர்களைப் பாதிக்கும் வகையில் பட்டமேற்படிப்புக்கு தேர்வு செய்யப்பட்டனர். இந்த மாதிரியான சீராகயில்லாத தேர்வு பட்டய மேற்படிப்பு படித்த மாணவர்களின் மத்தியில் மனக்கொதிப்பை ஏற்படுத்தியது.

2. இத்தேர்வு முறையை மாற்றும் நோக்கோடும் பட்ட மேற்பட்டயப் படிப்புப் படித்தவர்களுக்கும் போதுமான சந்தர்ப்பங்கள் அளிக்க வேண்டும் என்ற நோக்கோடும், ஒரு குறிப்பிட்ட துறையில் ஏற்கனவே தகுதிபெற்றவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கும் வகையில் 1981–82 ஆம் ஆண்டிலிருந்து பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டுமென்று 1981 ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசு ஆணையிட்டது.

(1) எம். டி. (பொது மருத்துவம்), எம். எஸ். (பொது அறுவையியல்) போன்ற பட்டமேற்படிப்புக்கு, எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் மனு செய்ய தகுதியானவர்கள்.

(2) பட்ட மேற்படிப்புக்கு முன்னோடியாக அதே படிப்பில் பட்டயப் படிப்பும் இருக்கும் பிரிவுகளில் பட்டயப்படிப்பு படித்தவர்கள் மட்டுமே மனு செய்ய தகுதியானவர்கள்.

முதல்வழி முறைப்படி எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் எம்.டி. (பொது மருத்துவம்) மற்றும் எம். எஸ். (பொது அறுவையியல்) போன்ற பட்ட மேற்படிப்புக்கு மனு செய்யலாம். மற்றும் பட்டயப்படிப்பு படித்தவர்கள் மட்டுமே எல்லா பட்ட மேற்

படிப்புக்கும் படிக்க தகுதி உடையவர்கள் என்று அரசு வழி முறைகள் பிறப்பிக்கவில்லை. இரண்டாவது கொள்கை விளக்கப் படி பட்ட மேற்பட்டய படிப்பு இருக்கும் மற்ற பிரிவுகளுக்கு பட்டயப்படிப்பு படித்தவர்கள் தான் பட்டமேற்படிப்புக்கு மனு செய்யலாம் என்பது பொருந்தும்.

3. எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் அல்லது பட்ட மேற்படிப்புப் பட்டயப் படிப்பு படித்தவர்கள் இந்த வழிமுறைகள் பற்றி எந்தவிதமான பதட்டநிலை அடைய வேண்டியதில்லை. உயர்நீதிமன்றமோ அல்லது உச்ச நீதிமன்றமோ இந்த வழி முறைகள் பற்றி எந்தவிதமான எதிரான கருத்தும் கூறவில்லை.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையைப் படிக்கின்ற நேரத்திலே எனக்கு எழுந்த ஒரு சில வினாக்களை இங்கே எழுப்பக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த அறிக்கையிலே வெகு அழகாக அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள் 1981–82 ஆம் ஆண்டுக்கு முன்பு ஒரு குழப்பமான நிலைமை இருந்தது என்பதை ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப் பட்ட குழப்பமான நிலைமையை உருவாக்கியவர்கள் யார்? அரசியல்வாதிகள் தான் அப்படிப்பட்ட குழப்பத்தை உருவாக்கி யவர்கள் என்று நான் கருதுகிறேன். இரண்டு ஆண்டுகள் எம்.டி. படிப்பை திடீரென்று நிறுத்திவிட்டு, அதற்கு டிப்ளமோ ஹோல்டர்ஸ் தேவை என்று மூன்று ஆண்டுகள் ஆக்கி, அதற்குப் பின்னாலே ஏகப்பட்ட குழப்பங்களை உண்டாக்கி, அதன்பிறகு தான் இப்படிப்பட்ட முடிவு எடுத்து இருக்கிறார்கள். அது 1981–82 ஆம் ஆண்டில் சரியானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்தக் குழப்பத்தை உருவாக்கியதன் விளைவாக 3 ஆண்டுகள் எம்.டி. படித்துவிட்டு, அந்தப் பட்ட மேற்படிப்பும் இல்லாமல் பட்டயப்படிப்பும் இல்லாமல் இன்று நடுவில் நின்றுகொண்டு இருக்கிறார்களே அவர்களுடைய கதி என்ன? அவர்களுக்கு மீண்டும் அந்தப் பட்டயப் படிப்போ அல்லது மேல் பட்டப்படிப்பு எம்.டி. படிப்போ படிப்பதற்கு அனுமதி கொடுக்கப்படுமா? ஏனென்றால் எம்.டி. கிடைப்பது கஷ்டம். பலமுறை கஜினிமுகமது போல் படையெடுத்தும் எம்.டி. கிடைக்காமல் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்த 3 ஆண்டுகால படிப்பை நம்பி எம்.டி. கிடைக்காமல் இதையும் பாஸ் செய்ய முடியாத நிலையில் இருப்பதைத் தடுப்பதற்கு, அவர்கள் டி.ஜி.ஓ.-வில் சேருவதற்காவது சந்தர்ப்பம் அளிக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, நான் மிகத் தெளிவாக அந்த அறிக்கையில் சொல்லி யிருக்கிறேன். இரண்டு வகைகளிலே அந்தப் போஸ்ட் கிராஜுவேட் குவாலிபிகேஷன்கள் இருக்கின்றன. எம்.டி. ஜெனரல், எம்.டி. (ஓ & ஜி) எம்.டி. ஜெனரலுக்கு டிப்ளமோ தேவையில்லை. எம்.டி. (ஓ & ஜி)-க்கு டிப்ளமோ தேவை என்று நாம் போட்டு இருக்கிறோம். முன்பெல்லாம் அந்த டிப்ளமோ இல்லாதவர்கள் நேரடியாகக் கூட அந்த போஸ்ட் கிராஜுவேட் டிகிரி—எம்.டி.—

பெற முடியும். ஆனால் இந்த ஆண்டு நாம் அதைப் பிரித்து விட்டோம். கேரள மாநிலத்தில் இதைப் போன்று கொண்டு வந்து இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலும் இந்த முறையைப் படிப்படியாக பின்பற்ற இருக்கிறார்கள். இருந்தாலும் டி.ஜி.ஓ. படித்தவர்களுக்கு எம்.டி. (ஓ & ஜி) படிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கக்கூடுமே என்ற அச்சத்தின் காரணமாக, டி.ஜி.ஓ. படித்தால் தான் அதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற திட்டத்தில் உத்தரவு போட்டு இருக்கிறோம். ஆகவே எந்தவிதமான கன்ப்யூஷனும் இல்லை. டி ஜி.ஓ படித்து விட்டால், எம்.டி. (ஓ & ஜி) சேரலாம். அதே மாதிரி எம்.டி. செஸ்ட் டிசீஸ் பொறுத்தவரையில், செஸ்ட் டிசீசில் டிப்ளமோ பெற்றவர்கள் எம்.டி. செஸ்ட் டிசீஸ் படிக்கலாம் என்று வைத்து இருக்கிறோம். இதிலே எந்தவிதமான குழப்பமும் இல்லை.

இப்போது கேள்வியை எழுப்பினவர்கள், ஏற்கனவே இந்த டிகிரி படிக்கக்கூடியவர்களுக்கு ஏதாவது பிரச்சினை உண்டா என்று. அவர்களுக்கு எந்தவிதமான பிரச்சனையும் இல்லை. அவர்கள் தங்கள் படிப்பை முடித்துவிடலாம். அதிலே பிரச்னை எழவில்லை.

டாக்டர் கே. சௌரிராஜன்: துணைத்தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என் கேள்வியை சரியாகப் புரிந்துகொள்ள வில்லை என்று கருதுகிறேன். 1981 ஆம் ஆண்டுக்கு முன்னல் 3 ஆண்டு எம்.டி. பட்டப்படிப்புக்கு ஒருவர் சேர்ந்திருக்கிறார். அவரால் எம்.டி. பாஸ் செய்ய முடியவில்லை. அதில் இருக்கிற கஷ்டம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகையால் பல தடவை படையெடுத்து, படையெடுத்து பாஸ் செய்ய முடியாமல் இருக்கிறவர்கள் டி.ஜி.ஓ. பட்டயப் படிப்புக்குச் செல்ல வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவரவர்களே, அது முடியாது. டி.ஜி.ஓ–வுக்கு ஃப்ரஷாகத்தான் போக வேண்டும். இதை ஒரு உதாரணம் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்க விரும்புகிறேன். முன்பு ஒரு காலத்தில் பி.ஏ. (ஆனர்ஸ்) இருந்தது. இன்டர்மீடியேட் முடித்த பிறகு 3 ஆண்டுகள் படித்து பி.ஏ. (ஆனர்ஸ்) தேர்ச்சிக்குச் செல்ல வேண்டும். பி.ஏ. (ஆனர்ஸ்) படித்த பிறகு அதிலே பாஸ் செய்ய முடியவில்லை என்றால் அவரை பி.ஏ-க்கு எழுது என்று சொல்லமுடியாது; அனுமதிக்கவும் முடியாது. படித்து அதிலே பாஸ் செய்ய முடியாதவர்களுக்கு ஒரு பரிகாரம் செய்யவேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதை தற்போது ஏற்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

மேட்டூர் கால்வாயிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் வழங்குவது.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 106–ன் கீழ் நான் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை அவையில் வைக்க விரும்பு கிறேன் :